# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1889/42 - 2014 නොවැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2014.11.21

*1889/42 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

எனது இல.: 4/3/1 (நியமனங்கள் - காணி கொள்ளல்) தொகுதி II

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 63 (2) அ பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் ஆகிய நான், கீழ்க்காணும் கட்டளையை இத்தால் விதிக்கின்றேன்.

*கட்டளை இல.: 2014/14 - நியமனங்கள்*

இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தினால் அமுல் செய்யப்படுகின்ற கொழும்பு தலைநகர் சார்ந்த அபிவிருத்தித் திட்டத்துடன் தொடர்புடைய காணி எடுத்தற் பணிகளைத் துரிதப்படுத்தும் பொருட்டு, இங்கு கீழ்க்காணும் அட்டவணையின் நிரல் I இல் காட்டப்பட்ட ஆளுகைப் பிரதேசங்களில், நிரல் II இல் காட்டப்பட்ட உத்தியோகத்தர்கள், நிரல் III இல் காட்டப்பட்ட காலப்பகுதிக்கு காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் காணி எடுத்தற் பணிகளை மேற்கொள்வதற்கான உத்தியோகத்தர்களாக இத்தால் நியமிக்கப்படுகின்றனர்.

| *நிரல் I*<br>ஆளுகைப் பிரதேசம்<br>பிரதேச செயலாளர் பிரிவு | *நிரல் II*<br>உத்தியோகத்தரின் பெயர் | *நிரல் III*<br>காலப்பகுதி |
|---|---|---|
| கொழும்பு, கொலொன்னாவை, கடுவலை, திம்பிரிகஸ்யாய, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, தெஹிவளை, மகரகமை | 1. திரு. கே. எம். ஆரியரத்ன, (இல.நி.சே. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) | 2014.10.01 ஆந் திகதி தொடக்கம் 2016.10.01 ஆந் திகதி வரை. |
| | 2. திரு. சீ. டீ. விதானபதிரண, (இல.நி.சே. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) | |
| | 3. திரு. சிறிபால கனேவல, (இல.நி.சே. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) | |
| | 4. திரு. பீ. டப். செனவிரத்ன, (இல.நி.சே. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) | |
| | 5. திரு. டீ. கே. மனம்பேரி, (இல.நி.சே. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) | |



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| நிரல் I<br>ஆளுகைப் பிரதேசம்<br>பிரதேச செயலாளர் பிரிவு | நிரல் II<br>உத்தியோகத்தரின் பெயர் | நிரல் III<br>காலப்பகுதி |
|---|---|---|
| கொழும்பு, கொலொன்னாவை,<br>கடுவலை, திம்பிரிகஸ்யாய,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,<br>தெகிவளை, மகரகமை. | 6. திரு. ஏ. எச். எஸ். லக்ஷ்மன்<br>(ஓய்வுபெற்ற சிரேட்ட காணி உத்தியோகத்தர்) | 2014.10.01 ஆந் திகதி தொடக்கம்<br>2016.10.01 ஆந் திகதி வரை. |

ஜனக பண்டார தென்னக்கோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014, நவெம்பர் 17.

12-225/1

---

பிழை திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

எனது இல.: 4/3/1 (நியமனங்கள் - காணி கொள்ளல்) தொகுதி II

2014.09.22 ஆந் திகதிய 1881/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (I) - பொது - அரசாங்க அறிவித்தல்களின் கீழ் கட்டளை இல. 2014/10 - நியமனங்களின் கீழ் நிரல் II இல் காட்டப்பட்ட திரு. ஆர். எம். எம். ரணசிங்ஹ (இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) என்பதற்குப் பதிலாக ஆர். எம். எம். ரணசிங்ஹ பிரதி கருத்திட்டப் பணிப்பாளர் (காணி எடுத்துக் கொள்ளலும், மீள் குடியமர்த்தலும்) எனப் பதிலீடு செய்யப்பட்டுத் திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜனக பண்டார தென்னக்கோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014, நவெம்பர் 17.

12-225/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.